செ.வெ.எண்.198 நாள்:24.05.2021

**நீலகிரி மாவட்டத்தில், தமிழ்நாடு அரசு அறிவித்துள்ள, முழு ஊரடங்கை கடைபிடிக்காமல், தேவையில்லாமல் வெளியில் வருபவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப.,அவர்கள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை.**

---

நீலகிரி மாவட்டம், உதகை சர்ச்ஹில் சாலை, சேரிங்கிராஸ் பகுதியில் இன்று (24.05.2021) திடீர் ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள், வாகனத்தில் செல்லும் நபர்கள் இ-பதிவு வைத்துள்ளார்கள் என்பதனையும், தேவையில்லாமல் வெளியில் வருபவர்களை கடுமையாக எச்சரித்து உடனடியாக திரும்பி செல்ல அறிவுறுத்தினார். மேலும், காவல் துறையினர் தீவிரமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் எனவும் உத்தரவிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழகத்தில் கொரோனா நோய் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறார்கள். மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இன்று முதல் முழு ஊரடங்கு கடைபிடிக்க வேண்டும் என அறிவித்துள்ளார்கள். நேற்றைய தினத்தில் காணொலி வாயிலாக நடைபெற்ற கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஊரடங்கினை மிகவும் கடுமையாக கடைபிடிப்பதோடு, கண்காணிப்பு பணிகளை தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் என உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில் நமது மாவட்டத்திலும் இன்று முதல் முழு ஊரடங்கு மிகவும் கடுமையாக கடைபிடிக்கப்படுகிறது. தினந்தோறும் நமது மாவட்டத்திலும் கொரோனா தொற்று நோயினால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டு வருகிறது. ஆகவே, அரசு அனுமதித்த பணிகளுக்கு தவிர வேறு காரணத்திற்காக தேவையில்லாமல் வரும் வாகனங்கள் உடனடியாக பறிமுதல் செய்ய காவல்துறையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொரோனா நோய் தொற்றின் தாக்கம் குறித்து பொதுமக்கள் விழிப்புணர்வோடு இருந்து கொள்ள வேண்டும். மேலும், ஏதேனும் ஒரு காரணத்தை கூறி பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியில் வருவதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.

மேலும், தமிழக அரசு மருத்துவம், காய்கறி வாகனங்கள் உள்ளிட்ட பணிகளுக்கு விலக்கு அளித்துள்ளது. அரசு தெரிவித்துள்ள பணிகளுக்கு மட்டும் அனுமதி உள்ளது. இதனை தவறுதலாக பயன்படுத்தும் வாகனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். பொதுமக்கள் இந்த ஒரு வார ஊரடங்கு காலத்தில் தேவையில்லாமல் வெளி வருவதை தவிர்த்து பாதுகாப்பாக இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இவ் ஆய்வின் போது, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.இரா.பாண்டியராஜன், மாவட்ட வன அலுவலர் திரு.குருசாமி தபேலா இ.வ.ப., மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.